මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව. | செயலகம், கொழும்பு 01. இலங்கை | The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: PED/RED/06/CIR/2016/02
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2016.02.12

அரச நிதிச் சுற்றறிக்கை இல: **02/2106**

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள் மற்றும்
மாவட்டச் செயலாளர்கள்
அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்டமுறை நிறுவனங்களின் தலைவர்கள்
அரசுடைமையாக்கப்பட்ட கம்பனிகளின் தலைவர்கள் அனைவருக்கும்

**1992 நிதி ஒழுங்கு விதிகளின் கீழ் உள்ள நி.ஒ. 108 ஐத் திருத்தம் செய்தல்**

நி.ஒ. 108 இல் குறிப்பிடப்பட்டுள்ள நட்டங்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய எல்லைகள் காலாந்தர தேவைப்பாடுகளின் பிரகாரம் திருத்தம் செய்தல் சம்பந்தமாக பொதுத் திறைசேரியின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 1992 நிதி ஒழுங்கு விதிகளின் கீழ் உள்ள நி.ஒ. 108 கீழ்க் காணும் விதத்தில் திருத்தம் செய்யப்படுகின்றது.

**நி.ஒ. 108 - நட்டங்களைக் கையாளும் அதிகாரிகள்.**

ஏதேனும் புதிய கொள்கைகள் சம்பந்தப்படாதவிடத்து இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் நட்டங்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு கீழ்க் காணும் உத்தியோகத்தர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படும்.

**அட்டவணை 01**

| நட்டங்கள் சம்பந்தமாக கையாளுவதற்கு அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் | நட்டங்கள் பறிறிய விபரம் | நிதி எல்லை |
|---|---|---|
| செயலாளர் ஒருவரான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | (அ) சாதாரணச் சுருங்கல், தேய்தல் மற்றும் அழுகுதல் போன்றவை | திறைசேரியனால் விதித்துரைக்கப்பட்ட சதவீதத்தினுள் |
| | (ஆ) கடல் அல்லது ஆகாய சம்பந்தமான இழப்புகள் | |

| | | |
|---|---|---|
| | (இ) வியாபாரிகள், கப்பற்காரர்கள், கப்பல் கம்பனி முகாமையாளர்கள் அல்லது பொருட்கள் இறக்கும் கம்பனிகள் ஆகியவற்றின் ஒப்பந்த உடன்படிக்கை தவறுகையினால் எழுந்த நட்டம் | பெறுமதி ரூபா. 2,000,000/- விஞ்சாத நட்டங்கள் |
| | (ஈ) இற்கு கீழே தரப்பட்டுள்ள வேறு நட்டங்கள்<br>(i) நி.ஒ. 105 (1) இன் பிரகாரம் | பெறுமதி ரூபா 1,000,000/- விஞ்சாத நட்டங்கள் |
| | (ii) மோசடி அல்லது நிலவுகின்ற முறையின் குறைபாடுகள் இல்லாதவிடத்து | பெறுமதி ரூபா. 2,000,000/- விஞ்சாத நட்டங்கள் |
| அமைச்சு செயலளா் அல்லாத பிரதான கணக்கீட்டு உத்தியோகததர் | நி.ஒ. 105 (1) இன் பிரகாரம் | பெறுமதி ரூபா. 500,000/- விஞ்சாத நட்டங்கள் |
| கணக்கீட்டு உத்தியோகத்தர் | (அ) 104 (2) இன் கீழ் அறிக்கை சமா்ப்பிக்க தேவையற்ற நட்டங்கள் | |
| | (ஆ) நி.ஒ. 105 (1) இன் பிரகாரம் | பெறுமதி ரூபா. 250,000/- விஞ்சாத நட்டங்கள் |

(02) நிச்சயிக்கப்பட்ட கட்டளை இடப்படுவதனால் மேலே அட்டவணை 01 இன் கீழ் உள்ள எந்தவொரு ஏற்பாடுகளினால் நியமிக்கப்பட்டுள்ள எல்லையை அதிகரிக்க அல்லது வேறு விதமாக திருத்தம் செய்வதற்கு திறைசேரியின் செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

(03) அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட முறைச் சபைகள், அரச வங்கிகள், பல்கலைக் கழகங்கள் மற்றும் உயா் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத்திற்குரிய கம்பனிகள் போன்ற நிறுவனங்கள் நட்டங்கள் பற்றி நடவடிக்கை எடுப்பதற்கு நி.ஒ. 101 தொடக்கம் நி.ஒ. 104 வரையான ஏற்பாடுகளை பின்பற்றும் சந்தா்ப்பங்களில் நட்டங்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரானது நிறுவனத்தின் பணிப்பாளா் சபையாகும். அங்கு நி.ஒ. 105 (1) இன் பிரகாரம் பெறுமதி ரூபா 500,000/- விஞ்சாத நட்டங்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு நிறுவனத்தின் பணிப்பாளா் சபைக்கு அதிகாரம் அளிக்கப்படும். எவ்வாறாயினும் இந்த எல்லையை விஞ்சும் சந்தா்ப்பங்களில், செயலாளா் ஒருவரான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக, உரித்துடைய நிறுவனம் கண்காணிக்கப்படும் அமைச்சின் செயலாளருக்கு மேலே அட்டவணை 01 இன் பிரகாரம் நட்டங்கள் பற்றி நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள நிதி எல்லைக்குள் நட்டங்கள் பற்றி நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் அளிக்கப்படும்.

(04) அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் சம்பந்தமான விடத்து நட்டங்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அதிகாரம் இல்லாத அனைத்து சந்தா்ப்பத்திலும் உரித்துடைய விடயம் சம்பந்தமாக முழுமையான விபரம் பொதுத் திறைசேரியின் அரச நிதித் திணைக்களத்தின் பணிப்பாளா் நாயகத்திற்கு அறிக்கை சமா்ப்பித்தல் வேண்டும்.

(05) அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட முறைச் சபைகள், அரச வங்கிகள், பல்கலைக் கழகங்கள், மற்றும் உயா் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத்திற்குரிய கம்பனிகள் போன்ற நிறுவனங்கள் சம்பந்தமானவிடத்து நட்டங்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அதிகாரம் இல்லாத அனைத்து சந்தா்ப்பத்திலும் உரித்துடைய விடயம் சம்பந்தமாக முழுமையான விபரம் பொதுத் திறைசேரிக்கு (உரித்துடைய அரசாங்க நிறுவனங்கள் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளா் நாயகத்திற்கு அல்லது தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தின் பணிப்பாளா் நாயகத்திற்கு) அறிக்கை சமா்ப்பித்தல் வேண்டும்

என்பதுடன் அந்தத் திணைக்களத்தினால் உரித்துடைய நிறுவனங்களில் நட்டங்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய முறை பற்றிய அவதானிப்புகளுடன் அவ் விபரங்களை அரச நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

(06) அரச நிதித் திணைக்களத்தினால் மேலே 04 மற்றும் 05 இன் பிரகாரம் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் சம்பந்தமாக திறைசேரிச் செயலாளரிடமிருந்து அல்லது திறைசேரி பிரதிச் செயலாளரிடமிருந்து கட்டளை பெற்றுக் கொள்ளப்படும்.

(07) இந்தச் சுற்றறிக்கை மூலம் திருத்தம் செய்யப்பட்ட ஏற்பாடுகள் 2016.02.01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்துமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

(08) இச் சுற்றறிக்கை சம்பந்தமாக மேலும் தெளிவுறுத்தல்கள் தேவைப்படுமாயின் தொலைபேசி இலக்கம் 011 2484614 ஊடாக அரச நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தை அழைக்க முடியும்.

ஓப்பம் : ஆர்.எச்.எஸ். சமரதுங்க

திறைசேரிச் செயலாளர்

பிரதிகள் : 01. ஜனாதிபதியின் செயலாளர்

02. பிரதமரின் செயலாளர்

03. அமைச்சரவைச் செயலாளர்

04. கணக்காய்வாளர் நாயகம்